**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக் கிழமைப் பிரசங்கம்**
**03 பிப்ரவரி 2023 / 12 ரஜப் 1444 ஹிஜிரி**

# <u>இஸ்லாமிய சட்டத்தை அமைக்கும் போது சூழ்நிலையைக் கவனத்தில் கொள்வதன் அவசியம்</u>

**الحَمدُ لِلَّهِ الَّذِي أَنزَلَ عَلَى عَبدِهِ الكِتَاب، تَبصِرَةً لِأُولِي الأَلبَابِ، وَأَشهَدُ أَن لَا إِلَهَ إِلاَّ اللهُ وَحدَهُ لاَ شَرِيكَ لَهُ رَبُّ الأَربَاب، وَأَشهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبدُهُ وَرَسُولُهُ المَبعُوثُ إِلَى خَيرِ أُمَّةٍ بِأَشرَفِ كِتَابٍ، اللَّهُمَّ صَلِّ عَلَى سَيِّدنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحبِهِ الأَنجَابِ، صَلاَةً وَسَلاَمًا دَائِمَينِ إِلَى يَومِ المَآبِ. أَمَّا بَعْدُ، فَيَا عَبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ**

**எனது அன்பிற்குரிய சக முஸ்லிம்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்பதன் மூலமாகவும் அல்லாஹ் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வதன் மூலமாகவும் அல்லாஹ்வின் மீதான உண்மையான "தக்வா" [பக்தியுடன்] அல்லாஹ்வை நினைவில் கொள்வோமாக! அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, நமது மார்க்கத்தின் அனைத்து விஷயங்களிலும் நமக்கு நேரான வழியைக் காட்டுவானாக! ஆமீன்.

**சகோதர, சகோதரிகளே!**

இந்த சந்தர்ப்பத்தை, சிறிது நேரம் உட்கார்ந்து சிந்திப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். எனது சகோதர, சகோதரிகளே! ஒவ்வொரு நேரமும் நாம் ஏதாவதொரு செயலைச் செய்கிறோம்; அந்நேரங்களில் நமது தேவைகளையும் சூழ்நிலைகளையும் நாம் கண்டிப்பாகக் கவனத்தில் கொள்கிறோம். உதாரணமாக, தூரமான நாடுகளுக்குப் பயணம் செய்வதற்கு நாம் திட்டமிடும் போது, அப்பயணத்துக்குத் தேவையான தயாரிப்புகளை போதுமான அளவு செய்து கொள்கிறோம். பொருத்தமான ஆடைகள், மருந்துகள், பணம் ஆகியவை அத்தயாரிப்புகளில் அடங்கும். நாம் பயணம் செய்ய இருக்கும் நாடுகளில் எவ்வளவு நாட்கள் அதிகமாகத் தங்க இருக்கின்றோமோ அந்த அளவு நமது தயாரிப்புகளும் அதிகமாக இருக்கும். பயணத்துக்கானத் தயாரிப்புகளைச் செய்யும் போது, நாம் செல்ல இருக்கும் நாடுகளின் சூழ்நிலைகள், குறிப்பாக, சீதோஷ்ண நிலைகள் ஆகியவற்றையும் கவனத்தில் கொள்வது அவசியமாகும்.

தற்போது கூறப்பட்ட உதாரணங்கள் எல்லாம் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்வது சம்பந்தமான பொதுவான ஆலோசனைகளாகும். தேவைகள் நமது தனிப்பட்ட தேவைகளா அல்லது உள்நாட்டு சமுதாயத்தின் தேவைகளா என்பதைக் கவனத்தில் கொள்வதும் சூழ்நிலையைக் கவனத்தில் கொள்வதில் அடங்கும்.,

இங்கு நாம், மார்க்க சம்பந்தமான விவகாரங்களிலும் சூழ்நிலைகளைக் கவனத்தில் கொள்வது அவசியம் என்பதையும் அறிவது அவசியமாகும். ஹதீதுகளை நாம் ஆய்வு செய்து பார்த்தால் இறைத்தூதர்[ஸல்] அவர்கள் தனது உபதேசத்தை, சிலவேளைகளில், தனிநபர்களின் தேவைகளுக்குத்

தக்கவாறும் அவர்களின் கேள்விகளுக்குத் தக்கவாறும் எவ்வாறு மாற்றிக் கூறியுள்ளார்கள் என்பதைக் காணலாம்.

உதாரணமாக, ஒருமுறை, இஸ்லாத்தின் சிறந்த செயல் எது என இறைத்தூதர்[ஸல்] அவர்களிடம் ஒருவர் கேட்டார். "அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வது" என அவருக்கு இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பதில் கூறினார்கள். மற்றொரு சம்பவத்தில் இதே மாதிரியான கேள்வியை மற்றவர் கேட்ட போது: "எப்போதும் அல்லாஹ்வை நினைவில் கொள்வதாகும்" என அவருக்கு இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பதில் கூறினார்கள். மற்றொரு முறை, மற்றொரு ஸஹாபி இதே மாதிரியானக் கேள்வியைக் கேட்ட போது: "தொழுகைகளை அவற்றுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் தொழுவதாகும்" என இறைத்தூதர்[ஸல்] பதில் கூறினார்கள்.

பல்வேறு சந்தர்ப்பங்களில் கேட்கப்பட்ட ஒரே மாதிரியானக் கேள்விக்கு நமது இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் வித்தியாசமாகப் பதில் கூறியதற்குக் காரணம், அவர்கள்[ஸல்] மறந்து விட்டார்கள் என்பதோ அல்லது அவர்களுக்குக் குழப்பமான நிலை ஏற்பட்டு விட்டது என்பதோ பொருளல்ல. இமாம் சுயூதி [ரஹ்] அவர்கள் இதற்கு விளக்கமளிக்கையில்: "இறைத்தூதர்[ஸல்] அவர்களின் பதில்கள் வித்தியாசமானவையாக இருந்ததற்குக் காரணம், அந்தந்த நேரங்களில் தனிநபரின் சூழ்நிலையை அவர்கள்[ஸல்] கவனத்தில் கொண்டதுதான்" எனக் கூறியுள்ளார்கள்.

**சகோதர, சகோதரிகளே!**

இதுதான், இஸ்லாத்தின் தனிப்பட்ட சிறப்பம்சமாகும். சமுதாயம் மற்றும் அதன் தனிநபர்களின் தேவைகளைக் கவனத்தில் கொள்ளாமல் விறைப்பானதாகவோ கடினமானதாகவோ இஸ்லாமிய சட்டங்கள் அமைக்கப்படவில்லை. அதே சமயம், நமது விருப்பங்கள் மற்றும் ஆசைகளுக்குத் தக்கவாறு மார்க்கத்திற்கு தன்னிச்சையாக விளக்கமளிப்பதோ அதன் கருத்துக்களை வளைப்பதோ கூடாது என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்விஷயத்தில் நுட்பமான சமநிலையைக் கடைப்பிடிப்பது அவசியமாகும்.

இஸ்லாமிய மார்க்கத்தின் தூண்களாக உள்ள கலிமா, தொழுகை, ஜகாத், நோன்பு, ஹஜ் ஆகியவை ஒருபோதும் மாற்றத்தை ஏற்றுக் கொள்ளாது. இவையெல்லாம் சட்டப்படியான கடமைகளாகும். அதே சமயம், இஸ்லாத்தின் சில சட்டங்கள் சமுதாயத்தின் கலாச்சாரம் மற்றும் பழக்க வழக்கங்களைக் கவனத்தில் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது என்பதையும், அல்லது அவை ”இஜ்திஹாத்” என்பதையோ அல்லது அறிஞர்களின் ஒருமித்த கருத்தையோ அடிப்படையாகக் கொண்டுள்ளன என்பதையும் நாம் அறிவது அவசியமாகும். இது போன்ற சூழ்நிலைகளில், இஜ்திஹாதில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் சமுதாயத்தின் மாற்றமானத் தேவைகளுக்குத் தக்கவாறு சில சட்டங்கள் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளும்.

**எனது சக முஸ்லிம்களே!**

இவ்விஷயங்களை நாம் முழுமையாக அறிந்து கொள்வது அவசியமாகும். காரணம், திருக்குர்ஆன் வசனங்களின் சில பகுதிகளையோ அல்லது

ஹதீதின் சில பகுதிகளையோ மட்டும் எடுத்துக் கொண்டு தீர்ப்புகளை வழங்குவது முறையல்ல; தீர்ப்பு வழங்குவதற்கு இவை மட்டும் போதுமாகாது. கடந்த கால நூல்கள் அல்லது பல்வேறு இணைய தளங்களில் காணப்படும் விஷயங்களை மேற்கோள் காட்டி தீர்ப்பு வழங்குவதும் போதுமாகாது.

இதற்குக் காரணம், ஃபத்வா எனப்படும் தீர்ப்பின் கருத்துக்கள் சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளின் பிரதிபலிப்பாக வெளியிடப்படுகின்றன. இஸ்லாமிய சட்டத்தின் வழிகாட்டுதலுடன், சமுதாயம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுக்கு விளக்கமளிக்கும் வகையில் ஃபத்வாக்கள் வழங்கப்படுகின்றன. எனவே, அக்கம்பக்கத்து நாடுகளில் வழங்கப்படும் ஃபத்வாக்கள் அதாவது, தீர்ப்புகள் சிங்கப்பூரில் செயல்படுத்தப்படுவதற்குப் பொருத்தமானவையாக இருக்காது என்பதை நாம் அறிய வேண்டும்.

இஸ்லாமிய மார்க்கம் அவ்வப்போது மாறும் சூழ்நிலைகளையும் மக்களின் வித்தியாசமானத் தேவைகளையும் கவனத்தில் கொண்டுள்ளதால்தான் இவ்வித்தியாசமான நிலை ஏற்படுகிறது என்பதை நாம் அறிய வேண்டும். வெளியிடப்படும் ஒவ்வொரு ஃபத்வாவும் சூழ்நிலையையும் அதன் எதார்த்த நிலையையும் கவனத்தில் கொண்டு வெளியிடப்பட வேண்டும். அவ்வாறே, பல்வேறு சூழ்நிலைகளில் செயல்படுத்த முடிகின்ற வகையில் ஃபத்வாக்கள் வழங்கப்பட வேண்டும். ஃபத்வாக்களை வெளியிடும் போது இவற்றையெல்லாம் கவனத்தில் கொள்ளப்படுவது அவசியமாகும்.

இங்கு, திருக்குர்ஆனின் "அத்-த஼ாபுன்" எனும் அத்தியாயத்தின் 16-வது வசனத்தில் அல்லாஹ் என்ன கூறுகிறான் என்பதை நாம் சிந்தித்துப் பார்ப்பது நன்றாக இருக்கும். அல்லாஹ் கூறுகிறான்:

فَٱتَّقُواْ ٱللَّهَ مَا ٱسْتَطَعْتُمْ وَٱسْمَعُواْ وَأَطِيعُواْ وَأَنفِقُواْ خَيْرًا لِّأَنفُسِكُمْ ۗ وَمَن يُوقَ شُحَّ نَفْسِهِۦ فَأُوْلَٰٓئِكَ هُمُ ٱلْمُفْلِحُونَ ١٦

பொருள்: ஆகவே, உங்களால் இயன்ற வரை அல்லாஹ்வுக்கு அஞ்சி நடந்து கொள்ளுங்கள்; [அவனுடைய போதனைகளைச்] செவிதாழ்த்திக் கேளுங்கள்; அவனுக்கு வழிபடுங்கள்; [அவன் பாதையில்] செலவு செய்யுங்கள்; [இது] உங்களுக்கு மேலான நன்மையாக இருக்கும்; அன்றியும், எவர்கள் கஞ்சத்தனத்தை விட்டும் பாதுகாக்கப்படுகிறார்களோ அவர்கள் தாம் வெற்றி பெற்றவர்கள் ஆவர்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, தன்னை நினைவில் கொள்ளுமாறு தனது அடியார்களுக்குக் கட்டளையிடுகிறான்; "தக்வா" என்பதன் பொருள் அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றி, அல்லாஹ் தடை செய்துள்ள அனைத்து விஷயங்களை விட்டும் தவிர்ந்து கொள்வதாகும். எனினும், தனது இந்தக் கட்டளையுடன் **ما استطعتم** எனும் சொற்றொடரையும் அல்லாஹ் இணைத்துக் கூறுகிறான். அதன் பொருள்: "உங்களால் முடிந்த வரை" என்பதாகும். இதன் மூலம் சில சந்தர்ப்பங்களில், தனிநபர்களின் வரையறைகளையும் தகுதி மற்றும் திறன்களையும் இஸ்லாம் கவனத்தில் கொண்டுள்ளது என்பது புலனாகிறது.

**சகோதர, சகோதரிகளே!**

தனிநபர்கள் மற்றும் சமுதாயத்தின் தேவைகளைக் கவனத்தில் கொள்வதால் மட்டும் சூழ்நிலையைக் கவனத்தில் கொண்டதாக ஆகாது. திருக்குர்ஆன் மற்றும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் கருத்துக்களைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதும் சூழ்நிலையைக் கவனத்தில் கொள்வதில் அடங்கும். மார்க்க நூல்களில் காணப்படும் கருத்துக்களின் பொருள் என்ன? அவற்றின் பின்னணிகள் என்ன? அக்கருத்துக்கள் சம்பந்தமாக மார்க்க நூல்களில் காணப்படும் மற்ற கருத்துக்கள் யாவை? என்பவற்றை அறிவதும் சூழ்நிலையைக் கவனத்தில் கொள்வதில் அடங்கும்.

சூழ்நிலைகளையும் பின்னணிகளையும் அறிவதன் மூலம் மார்க்க நூல்களில் காணப்படும் கருத்துக்களின் உண்மையான பொருளை அறிந்து கொள்ளும் ஆற்றலை நாம் பெறுவோம். திருக்குர்ஆனின் குறிப்பிட்ட வசனம் அல்லது குறிப்பிட்ட ஹதீதின் பின்னணிகளை நாம் அறிந்து கொள்ளவில்லையெனில், விரும்பத்தகாத, தவறான செயல்களுக்கும் அல்லது அதை விட மோசமாக, அவ்வசனங்கள் மற்றும் ஹதீதுக்கு மாற்றமான செயல்களுக்கும் அவற்றை நாம் ஆதாரமாக பயன்படுத்தி விட வாய்ப்புள்ளது. இதற்குக் காரணம், மார்க்க நூல்களாகிய திருக்குர்ஆன் மற்றும் ஹதீதின் சில கருத்துக்கள், பல்வேறு விளக்கங்களையும் புரிதல்களையும் தருபவையாக உள்ளன.

”ஷரீஅத்” எனும் மார்க்கத்தை உண்மையாகப் பின்பற்றும் முஸ்லிம்களாக நாம் ஆகுவோமாக! இந்த மார்க்கத்தை உண்மையாகப் புரிந்த,

அல்லாஹ்வின் அருள்மிக்க அடியார்களில் ஒருவராகவும் நாம் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَ أَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَ لَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللهِ، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّيَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَ بَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا

**ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَارَبَّ العَالَمِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.**

**عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُركُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضلِهِ يُعطِكُم، وَلَذِكرُ اللهِ أَكبَرُ، وَاللهُ يَعلَمُ مَا تَصنَعُونَ.**